# பொதுக்காலம் 12ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

எரேமியா நூலிலிருந்து வாசகம்: 20:10-13,

திருப்பாடல்: 69: 7-9, 13,16, 32-34,

திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்: 5:12-15,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: 10: 26-33

## திருப்பலி முன்னுரை:

**சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள்**

இறைமக்கள் அனைவருக்கும் என் அன்பு வணக்கம். ஆண்டின் பொதுக்காலம் 12ஆம் வாரத்தில் திருப்பலி வழிபாட்டில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் இறைமக்கள் அனைவருக்கும் என் அன்பு வாழ்த்தைக் கூறி மகிழ்கிறேன்.

இறைமகன் இயேசு கடவுளின் பராமரிப்பு பற்றி இன்றைய நற்செய்தியில் கூறுகிறார். பறவை இனத்தில் மிகவும் சிறியது சிட்டுக்குருவி. இந்த சிட்டுக்குருவிகள் எப்பொழுதும் உற்சாகத்துடனும் மகிழ்சியுடனுமிருப்பதை காணலாம். அவைகள் எதைப்பற்றியும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. உருவத்தில் மிகச் சிறிய சிட்டுக்குருவிகளையே கடவுள் இவ்வாராக பராமரித்து வருகின்றார். ஆகவே கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட நம்மை கடவுள் எவ்வளவாய் பராமரிக்கமாட்டார்? இவ்வுலகில் மாய்ந்து மாய்ந்து பொருள் தேடுவோர் ஏராளம். இவ்வுலக செல்வத்தை சேர்க்க எத்தகைய வழியையும் பின்பற்றி எப்படியும் வாழலாம் என்று மனம் போன போக்கில் முற்படுகின்றனர். இவர்கள் கடவுளின் அன்பையும் பராமரிப்பையும் கண்டுணராதவர்கள். ”அஞ்சாதீர்கள்” என்ற அறைகூவல் நமக்கு கடவுளின் பராமரிப்பையும், அன்பையும் உணர்த்துவதோடு மட்டுமல்லாமல் நேரிய வழியில் வாழ உற்சாகத்தைக் கொடுக்கின்றது.

ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள் என்ற இறைவாக்கிற்கேற்ப எந்த சூழ்நிலையிலும் தீய வழியை நாடாமல் கடவுள் காட்டிய நேரிய வழியிலும், உண்மையின் வழியிலும் வாழவும், நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழக்கூடிய வாழ்வையும் ஆண்டவரிடம் கேட்போம். தொடரும் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1.அன்பால் இணைந்திட அழைக்கும் மூவொரு இறைவா!**

திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் மற்றும் பொதுநிலையினர் உமது ஒன்றிப்பிலும், அன்பிலும் உம்மை உய்த்துணர்ந்தவர்களாய் அன்பிலும், ஒற்றுமையிலும் நிறைவாய் வாழ்ந்திட வேண்டிய வரங்களைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**2. உறவுகளின் ஊற்றான இறைவன்!**

எங்கள் குடும்பங்களின் உறவுகளிலேயே மிக அதிகமாகப் பழுதடைந்திருப்பது பெற்றோர்மீது, அதுவும், வயதானப் பெற்றோர்மீது நாம் கொண்டுள்ள உறவு. இந்த உறவை மீண்டும் அலசிப் பார்க்க, பழுதடைந்துள்ள அந்த உறவை மீண்டும் சரிசெய்ய, உறவுகளுக்கு முதலிடம் வழங்கும் வழிகளை மூவொரு இறைவன் எமக்குச் சொல்லித் தர வேண்டும்மென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**3. இரக்கத்தின் ஊற்றான இறைவா!**

உலகெங்கும் எழுந்துள்ள இயற்கைச் சீற்றங்களால் துயரத்திலுள்ள உம் மக்களைக் கண்நோக்கும். அவர்களின் துயரங்களைத் துடைத்து வெள்ளங்களினாலும், விபத்துக்ளினாலும், சிதைந்துபோன குடும்பங்கள் மீண்டும் தழைத்தோங்கவும், இழப்புகளினால் வாடிவருந்துவோர்கள் அனைத்தையும் மீண்டும் நிறைவாய் பெற்றிட வேண்டிய வரங்களைத் தந்தருளுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**4. அன்பு நிறைந்த எம் இறைவா!**

தூய ஆவியின் ஒளியால் எங்கள் பங்கிலுள்ள இளையோரின் இதயங்களுக்கு அறிவூட்டும். அவர்கள் சரியானவற்றை உணரவும், அவர் அளிக்கும் ஆறுதலினால் என்றும் மகிழ்ச்சியாய் இருக்கவும், ஞானக்கதிர்களை அவர்கள் மேல் பொழியுமாறும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. குழந்தைகள் விண்ணரசின் செல்வங்கள் என்று மொழிந்த எம் இறைவா!**

நீர் கொடுத்த செல்வங்களாகிய எங்கள் பிள்ளைகளை நாங்கள் பொறுப்புடன் வளர்க்கவும், அவர்களுக்கு இறை அச்சத்தையும் தூய வாழ்வுக்கான சிந்தனைகளை அறியச் செய்திடவும், தம் கடமைகளை உணர்ந்துத் தூயக் கிறிஸ்துவ வாழ்வு வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.